Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

முரசு 2 27-3-1985 புதன்கிழமை (பங்குனி 14 றஜப்-4) முழக்கம் 51

### மூன்று இளைஞர் மர்மக் கடத்தல்:

## திருநெல்வேலியில் தாய்மார் உண்ணாவிரதம் நடத்தினர்

ஒரு குறிப்பிட்ட இயக்கத்தைச் சேர்ந்த மூன்று இளைஞர்கள், அதே இயக்கத்தைச் சேர்ந்தவர்களால் தாக்கப்பட்டுக் கடத்திச் செல்லப்பட்டதை ஆட்சேபித்து திருநெல்வேலி அரசடி அம்மன் கோவிலில் நேற்று அதிகாலை முதல் நூற்றுக்கு மேற்பட்ட பெண்களும் ஆண்களும் உண்ணாவிரதம் இருந்தார்கள் "மக்களை ஏமாற்றும் பிற்போக்குவாதிகளே உங்கள் விடுதலை எமக்குத் தேவையில்லை" பதவி வெறி பிடித்த சதிக்கும்பலே அப்பாவிகளைக் கொல்வதை உடன் நிறுத்து!" போன்ற சுலோக —6-ஆம் பக்கம் பார்க்க

# வங்கியில் பணம் இல்லை; தபால் நிலைய பென்ஷன் வழங்கல் மறுஅறிவிப்புவரை ஒத்திவைப்பு!

தபால் நிலையங்கள் மூலம் பென்ஷன் பெறுபவர்களுக்கான கொடுப்பனவுகள் முன்னர் அறிவிக்கப்பட்டது போல இன்று புதன்கிழமை முதல் வழங்கப்பட மாட்டாது என்று நேற்று அறிவிக்கப்பட்டது.

மக்கள் வங்கியின் யாழ்ப்பாணக் கிளையில் பென்ஷன் வழங்குவதற்குத் தேவையான பணம் கையிருப்பில் இல்லாததே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

இம்மாதம் 25ம் திகதி முதல் குருநகரில் வைத்துப் பென்ஷன் வழங்கப்படுமென்று முன்னர் அறிவிக்கப்பட்டது வங்கியில் காசில்லாத காரணத்தால் இது ஒத்திவைக்கப்பட்டது.

இன்று 27ம் திகதி முதல் ஏப்ரல் 3ம் திகதிவரை பென்ஷன் வழங்கப்படுமென்று யாழ்ப்பாணம் பிரதான தபால் நிலையம் உத்தியோகபூர்வமாக நான்கு தினங்களுக்கு முன்னர் அறிவித்திருந்தது.

ஆனால் வங்கி பணம் இல்லை யென்று நேற்று கைவிரித்து விட்டதால், சகல பென்ஷன் கொடுப்பனவுகளும் காலவரையறையின்றி ஒத்திவைக்கப் பட்டுள்ளதாகத் தபால் நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

★ ரமேஷ் பண்டாரியிடம் அமைச்சர் 'தொண்டா' வலியுறுத்தினர்!

# தமிழ் பிரதேசங்களில் முதலில் சிவில் நிர்வாகம் ஏற்பட வேண்டும்

## நல்ல சூழ்நிலை சிதறடிக்கப்பட்டுவிட்டது; அமைதி நிலை ஏற்பட பாரதம் உதவவேண்டும்

(எமது விசேஷ நிருபர்)

"இனப்பிரச்சினைக்குச் சுமுகமான அரசியல் தீர்வு காணவேண்டிய நல்ல சூழ்நிலை சந்தர்ப்பவசத்தினால் சிதறடிக்கப்பட்டுவிட்டது. எனவே அதற்கான ஒரு அமைதியான நிலை ஏற்படுவதற்குப் பாரதம் தன்னாலான சகல முயற்சிகளையும் எடுக்க வேண்டும். அதற்கு முன்னர் தமிழர் வாழும் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் சிவில் நிர்வாகம் ஏற்படுத்தப்படவேண்டும்" என்று அமைச்சர் எஸ். தொண்டமான் கருத்து வெளியிட்டார்.

தமது அமைச்சு அலுவலகத்தில் இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் திரு. ரமேஷ் பண்டாரியுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இனப்பிரச்சினையைத் தீர்க்கும் விடயத்தில் இருநாடுகளுக்குமிடையில் கூடுதலான நட்புறவு ஏற்படவேண்டுமென்றும், உருப்படியான அரசியல் தீர்வொன்றைக்காண பாரதம் தன்னாலான முழு முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும் என்றும் அமைச்சர் தொண்டமான் வேண்டிக் கொண்டார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் செயலாளர் திரு எம் எஸ் செல்லச்சாமி, இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர் திரு. எஸ் ஜே. எஸ். சத்வால், இந்தியாவிலுள்ள இலங்கைத் தூதுவர் திரு. பேர்னாட் திலகரத்தன ஆகியோரும் இச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

### மகாசங்க பீடாதிபதிகள் சந்திப்பு

இந்திய வெளியுறவுச் செயலாளர் திரு ரமேஷ் பண்டாரி நேற்றிரவு, பௌத்த மகாசங் —6ஆம் பக்கம் பார்க்க

## பண்டாரியின் அவதான அணுகு முறையில் அரசாங்கம் 'மிக மகிழ்ச்சி' அடைந்துள்ளது!

திரு. ரமேஷ் பண்டாரியின் அவதானிப்பு, பேச்சுவார்த்தைப் போக்கு, விடயங்களை அணுகும் முறை ஆகியவைகளையிட்டு அரசாங்க தரப்பினர் 'மிகவும் மகிழ்ச்சி' அடைந்திருப்பதாக அரசாங்க வட்டாரங்கள் நேற்றிரவு தெரிவித்தன.

பாரதப் பிரதமரின் சிறப்புப் பிரதிநிதியாக முன்னர் இங்கு வந்து பேச்சுவார்த்தைகளை நடத்திய திரு. ஜி. பார்த்தசாரதியிலும் பார்க்க திரு. பண்டாரியின் அணுகு முறையில் இலங்கை அரசு கூடிய மகிழ்வடைந்திருப்பதாகவும் அதே வட்டாரங்கள் தெரிவித்தன.

திரு. பண்டாரி நேற்று பிரதமர் ஆர். பிரேமதாஸ, அமைச்சர்கள் லலித் அத்துலத் முதலி, கே. டபிள்யூ தேவநாயகம் ஆகியோரையும் சந்தித்து உரையாடினர்.

நேற்றிரவு இலங்கையில் உள்ள பாரத நட்புறவுக்கழகம் அவருக்கு விருந்தளித்துக் கௌரவித்தது.

இன்று காலை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, எதிர்க்கட்சித் தலைவர் திரு. அனுரா பண்டாரநாயக்கா ஆகியோரைச் சந்தித்து பேசிய பின்னர் களனிப் பல்கலைக் கழகத் துணை வேந்தரும், பௌத்த உயர்சங்கத் தலைவருமான வண. ராகுல தேரோவையும் சந்திப்பார்.

—6ஆம் பக்கம் பார்க்க

### அர்ச். அந்தோனியார், வண்ணை பெருமாள் செல்வச் சந்நிதி ஆலயங்களில் விசேஷ பூசை

## அமிர் எவருடனும் பேச அனுமதிக்கப்படவில்லை

(சென்னை)

கடந்த நான்கு தினங்களாக சென்னை தேவகி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வரும் கூட்டணிச் செயலதிபர் திரு அ. அமிர்தலிங்கத்தின் உடல் நிலையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றமெதுவும் நேற்றுக் காணப்படவில்லை என்று நேற்றிரவு தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்தும் படுக்கையிலேயே அவர் இருந்து வருவதாகவும், எவருடனும் கதைக்கவோ, அல்லது தொலைபேசியில் பேசவோ அனுமதிக்கப்படவில்லை என்றும் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டபோது தெரிவித்தார்.

"இரத்த அழுத்தம்" கூடிக் குறைந்து காணப்படுவதாக —6ஆம் பக்கம் பார்க்க

### தப்பியவரும் பிடிபட்டார்!

## கிளிநொச்சியில் இருவருக்கு மரணதண்டனை

(கிளிநொச்சி)

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தால் நேற்றும், நேற்று முன்தினம் இரவும் இரண்டு பேருக்குக் கிளிநொச்சியில் மரண தண்டனை வழங்கப்பட்டது.

பூநகரியைச் சேர்ந்த பொன்னையா துரைசிங்கம், எம். வீ ஆறுமுகம் ஆகியோரே மரண தண்டனை பெற்றவர்களாவர். இவர்கள் இருவரும் நேற்று முன்தினம் இரவு ஒரே இடத்தில் வைத்துச் சுடப்பட்ட போதிலும் ஒருவர் காயத்துடன் தப்பி ஓடிவிட்டாராம்.

—6ஆம் பக்கம் பார்க்க

## யாழ். தனியார் போக்குவரத்து இன்று முழுநாள் வேலைநிறுத்தம்!

யாழ். மாவட்டத்தில் தனியார் பஸ் சேவைகளைச் சீர்குலைக்கும் வகையில் இடம்பெற்று வரும் சம்பவங்களைக் கண்டித்து இன்று முழுநாளும் ஒருநாள் அடையாள வேலைநிறுத்தத்தில் தாம் இறங்குவிருப்பதாக வடபகுதித் தனியார் போக்குவரத்துச் சங்கங்கள் அறிவித்துள்ளன.

இது தொடர்பாக சில தனியார் போக்குவரத்துச் சங்கங்கள் விடுத்துள்ள அறிக்கையில்;

சேவையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் போது பயணிகளை இறக்கிவிட்டு வாகனம் கடத்துவதையும், சாரதிகள் தாக்கப்பட்டு வாகனங்கள் பறிக்கப்படுவதையும், தேவை முடிந்த பின்னர் அவற்றை அநாதரவாக விடுவதையும், எரிபொருள் பறிக்கப்படுவதையும் தடுக்கக் கோரும் அதேசமயம் ஒருநாள் வேலைநிறுத்தத்தினால் சேவை பாதிக்கப்படுவதையிட்டு கவலை அடைகிறோம் என்று தெரிவித் —6ஆம் பக்கம் பார்க்க

### கிளிநொச்சி சம்பவத்தில் பலருக்கு காயம்

நேற்று கிளிநொச்சியில் மரண தண்டனைச் சம்பவங்கள் நடைபெற்றதைத் தொடர்ந்து வாகனங்களில் சிறுடையில் வந்தவர்கள் அங்குமிங்கு —6ஆம் பக்கம் பார்க்க

## 1983க்கு முன் பட்டம் பெற்ற ஆசிரியருக்கு 84 முதல் சம்பள உயர்வு!

1983ஆம் ஆண்டு பட்டத் தேர்வுக்குத் தோற்றி சித்தி பெற்ற அனைத்து ஆசிரியர்களுக்கும் 1984 ஜனவரி முதலாந் திகதியிலிருந்து பட்டதாரிச் சம்பளம் வழங்குமாறு கல்வி அமைச்சு யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்தை மீண்டும் பணித்துள்ளதென இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் தெரிவித்தார்.

பல மாதங்களுக்கு முன்னர் இது சம்பந்தமானசுற்றறிக்கை —6ஆம் பக்கம் பார்க்க

பாதிக்கப்பட்டதால் வழங்கப்பட்ட

## மீனவர் அன்பளிப்பு பொருள் விற்பனை செய்யப்படுகிறது?

(மானிப்பாய்)

பாதிக்கப்பட்ட மீனவருக்கு சர்வதேச இயக்கங்களினால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட பால்மா பெட்டிகளும், மீன்ரின் வகைகளும் விற்பனை செய்யப்படுவதாகத் தெரிய வருகிறது.

''விற்பனைக்கு அல்ல'' என இவற்றின் மீது பொறிக்கப்பட்ட எழுத்துகள் அழிக்கப்பட்டபின் இவை விற்பனை செய்யப்படுகிறது எனக் கூறப்படுகிறது இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திய சில வர்த்தகர்கள் இவற்றை மிகக் குறைந்த விலைக்கு வாங்குகின்றனராம். அன்பளிப்புப் பொருட்களை விற்பதும். வாங்குவதும் எமது மக்களுக்கு எதிர்காலத்தில் கிடைக்கப்போகும் இவ்வாறன உதவிகளுக்கு பெரும் தடையாக இருக்குமெனக் கருத்துத் தெரிவிக்கப்படுகிறது.

## வயாவிளான் அதிபர் ஓய்வு பெறுகிறார்

கடந்த பத்து ஆண்டுகளாகச் சிறப்பாகப் பணிபுரிந்த வயாவிளான் மத்திய மகா வித்தியாலய அதிபர் ஏ. இராமசாமி நாளை இருபத்தெட்டாம் திகதியிலிருந்து ஓய்வு பெறுகிறார். இதனை முன்னிட்டு எதர்வரும் வியாழக்கிழமை அவரைக் கௌரவித்துத் தேனீர் விருந்துபசாரமும் சேவை நலம் பாராட்டு விழாவும் நடைபெறவுள்ளது. பாடசாலை அபிவிருத்திச் சபையினரின் பாராட்டுப் பத்திரம் வழங்கலும் இடம் பெறும்.

## மதகு தகர்ப்பு

(சுழிபுரம்)

சுழிபுரம் திருவடிநிலையிலுள்ள பிரதான வீதியின் மதகு ஒன்று இனந்தெரியாதவர்களால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது.

இதனால் மதகின் ஒரு பகுதி முற்றாகத் தகர்ந்துள்ளது. குறிப்பிட்ட ஒரு சாராரின் போக்குவரத்தைத் தடை செய்யும் முயற்சியாகவே இம் மதகு தகர்க்கப்பட்டது எனக் கூறப்படுகிறது.

## பாராட்டு விழா

(கொடிகாமம்)

கொடிகாமம் தபால் நிலையத்தில் சிற்றூழியராக கடமையாற்றி மந்துவில் உபதபால் நிலைய அதிபராக நியமனம் பெற்றுச்சென்ற திரு ஐயாத்துரை ஜெயராசசிங்கத்திற்கு கொடிகாமம் தபால் நிலையத்தில் அதிபர் திரு. வி பி திருச்செல்வம் தலைமையில் ஓர் பாராட்டுவிழா நடைபெற்றது. கொடிகாமம், கச்சாய், மீசாலை வடக்கு மக்களும் மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலய அதிபரும முன்னைநாள் கொடிகாமம் தபால் அதிபர் உதவி அதிபர்களும் கலந்து கொண்டு பாராட்டுரை வழங்கினர்.

## இந்து மன்றம் உதயமானது

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில இந்து இளைஞர் மன்றம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது இங்குள்ள இந்து மாணவ, மாணவிகள் ஒன்றுகூடி மன்றத்தை அமைத்தனர்.

இதன் அங்குரார்ப்பண வைபவத்தில் கலந்து கொண்ட மில்க்வைற் அதிபர் திரு. க. கனகராஜா பெரும் தொகையான நூல்களை மன்றத்துக்கு அன்பளிப்புச் செய்தார்.

## வடமராட்சியில் திடீர் சோதனை

(உடுப்பிட்டி)

வடமராட்சிப் பகுதியிலுள்ள விற்பனை நிலையங்களில் யாழ். உள்நாட்டு வர்த்தகத் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகள் திடீர் சோதனைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

பாவனையாளர்களுக்கு பொருட்கள் விநியோகிக்கப்படுவது தொடர்பாகவே இத் திடீர் சோதனைகள் இடம் பெறுகின்றன.

யாழ் உள்நாட்டு வர்த்தக உதவி ஆணையாளர் திரு. எஸ். ரி. மார்க்கண்டு மற்றும் உத்தியோகத்தர்கள் இதில் ஈடுபட்டு வருகின்றனர்.

## ஆலயக் கிரியைகள் ரி. வியில் காண்பித்தல் பயனளிக்கும்

(சித்தன்கேணி)

'' ஆலயங்களில் நடைபெறும் பூஜைகள், கொடியேற்றம், யாகம் முதலான பல்வேறு வகையான நிகழ்ச்சிகளையும் தொலைக்காட்சி மூலம் மணவர்களுக்கு அறிமுகம் செய்தல் பெரும் பயனுள்ளதாக அமையும் ஆலயத்திற்குச் செல்லல், ஆலய நிகழ்ச்சிகள், கட்டட அமைப்புக்கள் முதலானவற்றின் தத்துவங்களை மணவர்கள் உணர்ந்து கொள்ள தொலைக்காட்சிப் படங்கள் பெரும் வாய்ப்பளிக்கும்.''

இவ்வாறு யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நல்லூர் சுற்றலுக்கும அபிவிருத்துக்குமான மூலவள நிலையத்தினர் க. பொ. த உயர்தர வகுப்பு இந்து நாகரீக மாணவர்களுக்காக நடாத்திய கருத்தரங்கில் 'கோயிற் கிரியைகளும வழிபாடும' என்னும் பொருள் பற்றி உரையாற்றிய யாழ் பல்கலைக் கழக இந்து நாகரீகத்துறை விரிவுரையாளர் திரு. மா. வேதநாதன் கூறினார்.

யாழ். இந்து மகளிர் கல்லூரி அதிபர் செல்வி ஆர். இராமநாதன் தலைமையில் இக் கருத்தரங்கு நடைபெற்றது.

திரு. வேதநாதன தொடர்ந்து உரையாற்றும்போது ஆலய வழிபாட்டில சகல மக்களும் ஈடுபட வேண்டும். ஆலய வழிபாடு மக்களைப் புனிதமாக்குகின்றது. பக்தனுக்கு கிறைது. ஆலய வழிபாட்டினால் மக்கள் அடையும் பயன்கள் ஏராளம். மாணவர்கள் ஒவ்வொருவரும ஆலயங்களுக்குச் சென்று வழிபடுவதோடு நின்று விடாது ஆலயத்தில் நடைபெறும் சகல நிகழ்ச்சிகளையும் நன்றாக அவதானிக்க வேண்டும ஆலய நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு தத்துவங்களை உணர்த்துகின்றன. இத்தத்துவங்கள் எல்லாம் எமக்குப் பேருதவி புரிகின்றன.'' என்றார்.

யாழ். பல்கலைக் கழக இந்து நாகரீகத்துறை விரிவுரையாளர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன, நல்லூர் கல்வி வள நிலைய பொறுப்பு அலுவலர் திரு பி. நடராசா ஆகியோர் உட்பட மற்றும் பலரும் உரையாற்றினர், நல்லூர் கல்வி வட்டாரப் பாடசாலைகளின கல்விப்பொதுத்தராதர உயர்தர வகுப்பு மாணவர்களும ஆசிரியர்களும் இக்கருத்தரங்கில் கலந்துகொண்டனர்.

## பரீட்சையில் சித்தி

(அரியாலை)

அரியாலையைச் சேர்ந்த திரு. ப. சசிதரன் ஹோமியோபதி பரீட்சையில் சித்தி அடைந்துள்ளார். இவர் ஸ்ரீ கலைமகள் சன சமூக நிலையச் செயலாளரும் அறவழிப் போராட்டக் குழுவின் உறுப்பினருமாவர்.



✻ அரியாலை விபுலானந்தர் வீதி நாகாராசா மோகனராணி தம்பதிகளின் மகன் யசிந்தன் தனது நான்காவது பிறந்த நாளைக் இன்று கொண்டாடுகின்றார்.

✻ சண்டிலிப்பாய் மாசியப்பிட்டி ராஜா சாந்தா தம்பதிகளின் மகன் ரேசான் (தினேஸ்) இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.

✻ குரும்பசிட்டி, ஞானன் ராணி தம்பதிகளின் மகள் டர்மிளா (றமா) தனது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.

✻ கிளிநொச்சி ஜெயந்திநகர் நாகராசா இராஜேஸ்வரி தம்பதிகளின் மகன் ராஜநாதன் இன்று தனது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்

✻ யாழ் மின்சார நிலையவீதி விஞயகமூர்த்தி லீலாநாச்சியார் தம்பதிகளின் மகன் மாசிலாமூர்த்தி தனது மூன்றாவது பிறந்தநாளைக் இன்று கொண்டாடுகின்றார்.

✻ கொட்டடி வைரவர் கோவில் வீதி, ரகுநாதன் ஜமுனா தம்பதிகளின் மகன் சிவகுமாரன் தனது முதலாவது பிறந்தநாளைக் இன்று கொண்டாடுகின்றார்.

✻ மாதனை கனகசேகரம் தம்பதிகளின் மகள் கவீந்திரா தனது முதாலது பிறந்த நாளைக் இன்று கொண்டாடுகின்றார்.

✻ யாழ்ப்பாணம் சரவணமுத்து கமலபாரதி தம்பதிகளின் மகள் குகரூபி இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

✻ சங்குவேலி வடக்கு இந்திரன் தனலட்சுமி தம்பதிகளின் மகள் தட்சாயினி இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

## பண்ட. தபால் நிலையத்தில் காசுக் கட்டளைகள் தேக்கம்

(சித்தன்கேணி)

பண்டத்தரிப்பு தபால் அலுவலகத்தில் சுமார் எழுபதாயிரம் ரூபா பெறுமதியான காசுக் கட்டளைகள், மணியோடர்கள், மாற்றிக் கொடுக்கப்படாது தேங்கிடக்கின்றனவாம்.

கடந்த ஜனவரி மாதம் இருபத்தைந்தாம் திகதி முதல் நடைபெற்ற கொள்ளைச் சம்பவங்கள் காரணமாக இத்தபாற்கந்தோர் மூடப்பட்டிருப்பதாலேயே இந்தக் காசுக் கட்டளைகளும் மணியோடர்களும் பொது மக்களுக்கு மாற்றிக் கொடுக்கப்படாது தேங்கிக் கிடக்கின்றன எனக் கூறப்படுகிறது.

பண்டத்தரிப்பு தபால் நிலைய விழிப்புக்குழுவினரின் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய பண்டத்தரிப்பு தபால் நிலையத் தபாலதிபர் திரு எஸ் சரவணமுத்து மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

## யாழ்ப்பாணக் கல்லூரி வெற்றி

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற 50 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட கிறிக்கட் போட்டியில் யாழ்ப்பாணம் புனித சம்பத்தரிசியார் கல்லூரியை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஒரு விக்கட்டால் தோற்கடித்தது கதிர்காமர் கிண்ணத்துக்கான முதலாவது மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்ட வருடாந்தப் போட்டியில் யாழ்ப்பாணக் கல்லூரி வெற்றி பெற்றது.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

நல்லூர், நாயன்மார் வீதியில் நன்னீர்க் கிணறுடன் பயன் மரங்களுடனும் 2 பரப்புக் காணியும, மறவன்புலோ, கேரதீவு ரோட்டில் முருகமூர்த்தி கோவிலுக்கருகில் 10 பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு திருமதி. உருக்மணி அம்மா, 41/5, அரச வீதி, நல்லூர்


பெற்று எசன்ஸ் சப்ளையேர்ஸ்
PETTAH ESSENCE SUPPLIERS

பேக்கரி தயாரிப்புகள்,
பிஸ்கட், ரொபி, இனிப்பு, குளிர்பானம்,
ஐஸ்கிறீம், சிற்றுண்டி வகைகளுக்கான சகலவிதமான
எசன்ஸ், கலர்ப்பவுடர், கேக் தயாரிப்புக்குத் தேவையான
சகல பொருட்களுக்கும்

✻ ஊதுபத்தி ✻ சாம்பிராணி
✻ விளைவு சூடம் ✻ ரல்கம் பவுடர்
✻ வெள்ளை மஞ்சள் வசலின்
✻ வாசனைத்திரவிய எண்ணை
✻ ஓடிக்கொலோன்

ஆகியவை தயாரிப்பதற்கான உற்பத்திப் பொருட்களும்
ஏனைய இதர

✻ பேப்பர் வகை ✻ பொக்ஸ்போட்
✻ காட்போட் ✻ ஆற்போட்
✻ நியூஸ்பேப்பர் ✻ ஒயில் பேப்பர்
✻ பிறவுண் பேப்பர்
✻ ரிசு பேப்பர்
✻ சலப்பின்

மற்றும் எல்லா பொலித்தீன் வகைகளுக்கும்
அச்சகங்கட்குத் தேவையான
சகல மை வகைகளுக்கும்
எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்பெற்ற ஸ்தாபனத்திற்கு
இன்றே விஜயம் செய்யுங்கள்.

223, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்
223, Power House Road, Jaffna



வெளிநாடு பிரயாணமா?

ஜேர்மன், பிரான்ஸ், சுவிஸ், கொலன்ட் செல்பவர்கட்கு பாஸ்போட், ரிக்கற், கொழும்பில் தங்குமிட வசதி, விமான நிலைய ஒழுங்குகள் யாவும் உடன் செய்துகொடுக்கப்படும்.

விபரங்களுக்கு:
JAFFNA TECHNICAL INSTITUTE
ஸ்ரான்லி வீதி, (றெயில்வே கடவை அருகாமை)
யாழ்ப்பாணம்.



✻ தமிழ் ஆங்கிலத் தட்டச்சு றேனியோ வேலைகளும் சகல விதமான செயலகச் சேவைகளும்.
✻ தொலைபேசி சுத்தப்படுத்தும் சேவை.
✻ மணமகன் / மணமகள் தேவைகள் தொடர்பான திருமணச் சேவைகள்.
✻ அஞ்சல் வழி ஆங்கிலக் கல்விச் சேவை.
✻ காணி, வீடு, வளவு சம்பந்தப்பட்ட தரகுமுகவர் சேவை.
✻ வெளிநாட்டுப் பிரயாணம் மேற்கொள்வோர்க்குத் தேவையான சகல ஒழுங்குகளையும் பயண ஆலோசனைகளையும் வழங்கும் பிரயாண சேவை.

தொடர்பு கொள்ளுங்கள்!

மல்ரி சேவிசஸ்

37 (351), மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
(வெலிங்டன் தியேட்டர் சந்திக்கருகில்)
தொலைபேசி: 22762

தமிழ் விழாவில் தமிழ் பேராசிரியர் பேச்சு:

# தமிழ் இளைஞர்களுக்கு எதிர்காலமுண்டு அவர்கள் எங்கும் ஓடிவிடமாட்டார்கள்

(நல்லூர்)

தமிழர்கள் மிகவும் கெட்டித்தனமானவர்கள். அதிலும் யாழ்ப்பாணத் தமிழர்கள் கல்வியில் மிகவும் கெட்டித்தனமானவர்கள். இவர்களுள் அறிஞர்களாகத் திகழ்ந்தவர்களாகவும், எல்லாராலும் போற்றிப் புகழப்பட்டவர்களுமான சேர். பொன். இராமநாதன், சேர். பொன். அருணாசலம், திரு. ஆனந்தகுமாரசாமி போன்ற பெருந்தலைவர்கள் அன்று சிங்கள மக்கள் விழித்தெழ வேண்டும். எழுச்சி பெற வேண்டும் என்று பேசியும், எழுதியும் வந்தார்கள். சிங்கள மக்கள் எழுச்சி பெற்றால்தான் இலங்கை முன்னேற்றமடையும் இவர்களுடன் இணைந்து தமிழர்களும் மகிழ்ச்சியாக வாழலாம் என்று கூறினார்கள், அன்று அவர்கள் கூறியதன் பயன் இன்று தெரிகிறது. அன்று கெட்டித்தனமுள்ள தமிழ் தலைவர்கள் தீர்க்கதரிசனம் அற்றவர்கள் என்பதை நாம் இன்று அறிய முடிகிறது இவ்வாறு யாழ்-பரியோவான் கல்லூரியின் பீற்றர் ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற தமிழ்த்தின விழாவில் சிறப்புரை நிகழ்த்திய யாழ்-பல்கலைக்கழக தமிழ்த்துறை பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

இன்று தமிழுக்கு எடுக்கப்படும் விழா இளைஞர்களாகிய எங்களுக்கு எதிர்காலம் உண்டு என்பதையும், நாங்கள் எங்கும் ஓடிவிடமாட்டோம் என்பதையும் எடுத்துக்காட்டுவதாக அமைந்திருக்கின்றது. இவ்விழா மாணவரின் துணிவிற்கு எடுத்துக்காட்டாக அமைந்திருப்பதுடன், அவர்களின் படைப்புக்கள் அவர்களுடைய திறமையை வெளிப்படுத்துவனவாக அமைந்திருக்கின்றன. தமிழ் மொழியை எழுதுவோர் மத்தியில் குறியீடுகளை ஒழுங்காக இடாமல் விடுகின்ற குறைபாடுகள் பெருமளவில் காணப்படுகின்றது இக்குறைபாட்டை பத்திரிகைகளிலும், வெளிவருகின்ற நூல்களிலும் பெருமளவில் காணக்கூடியதாக இருக்கிறது வசனங்களில் குறியீடுகள் ஒழுங்காக அமையாதிருக்கும் முறை 19ம் நூற்றுண்டுக்குப் பின்பே மேனாட்டு இலக்கியங்களிலிருந்து வந்தவையாகும் ஆற்றோட்டத்தைவழிப்படுத்த அணைபோல, மொழிவளர்ச்சிக்கும் அந்தக் குறியீட்டுமுறைகள் அவசியமாகின்றன. இந்த முறைகளை மாணவர்கள், படைப்பாளிகள் கவனித்துக் கொண்டால் அவர்களின் படைப்பின் தரம் மேலும் உயரும்.

ஆக்க இலக்கியங்கள் செந்தமிழிலா அல்லது பேச்சுத்தமிழிலா அமைய வேண்டுமென்ற போராட்டம் கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்டது. இவ்விடயத்தில செந்தமிழ் மொழி பிளவுபட்டு வதைத் தடுக்க உதவும். ஆனல் பேச்சுத்தமிழ் ஆக்க இலக்கியங்களை உயிரோட்டமுள்ளதாக்குகின்றது. என்னும் கருத்தையே நான் கொண்டிருக்கிறேன்.

பேச்சுத் தமிழில் உள்ள குறைபாடு அது பிரதேசத்திற்குப் பிரதேசம் வேறுபடுகிறது. இதனுல் ஒரு பிரதேசத்தவரின் படைப்பை மற்றொரு பிரதேசத்தவர் விளங்கிக் கொள்வது கடினமாக உள்ளது. மாணவர்களாகிய நீங்கள் வாழ்க்கை முறைகளை இயற்கைச் சூழ்நிலைகளைக் கூர்ந்து நுணுக்கமாக அறிந்து ஆராய வேண்டும். பலதுறை, பலமொழி அறிவு போதியளவு இலக்கியப்பயிற்சி, ஓரளவு இலக்கணப்பயிற்சி என்பவற்றைப்பெற வேண்டும், அப்பொழுதுதான் நீங்கள் படைப்பாளிகளாகவும். நல்ல அறிஞர்களாகவும் திகழமுடியும் என்று கூறினுர்.

தமிழ் விழா வைபவத்தை கல்லூரியின் மத்திய பிரிவு தலைமையாசிரியர் திரு எஸ், பி ஜீவானந்தம் மங்கள விளக்கேற்றி, வைக்க தமிழ்த்தாய் வணக்கத்துடன் ஆரம்பமாகியது.

இவ்விழாவிற்கு செல்வன். சிவஞானம்- ஜெயசங்கர் தலைமைவகித்தார்.

கல்லூரி அதிபர் திரு. சீ. ஈ. ஆனந்தராஜன் விழா அமைப்பைப் பாராட்டியதுடன், பரியோவான் தமிழுக்குத் தொண்டு செய்வதிலும், தமிழுக்கு மதிப்புக் கொடுப்பதிலும் என்றும் பின்னிக்கிறதில்லை, தமிழ் மாணவர் மன்றம் மாணவர்களின் ஆக்கத்திறனை வெளிப்படுத்துவதில் முக்கியமான பங்கை வகிக்கிறது என்று குறிப்பிட்டார்.

கிளிநொச்சி மாவட்டத்தில்

# விவசாய விரிவாக்க சேவை பிரிவு குறைக்கப்படுகின்றது

(மிருசுவில்)

கிளிநொச்சி மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளரின் கீழ் வரும் விவசாய விரிவாக்கச் சேவையாளர் பிரிவுகளின் தொகை, விஸ்தீரணம் என்பன தற்போது புதிதாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளன.

இம்மாவட்டத்திலுள்ள எட்டு சமநலச்சேவை நிலையத்திலும் மொத்தமாக முப்பத்து ஏழு விவசாய விரிவாக்க சேவையாளர் பிரிவுகள் முன்னர் இயங்கி வந்தன தற்போது இவற்றின் எண்ணிக்கை இருபத்து ஒன்பதாகக் குறைக்கப்பட்டுள்ளது.

எண்ணிக்கை குறைக்கப்பட்டு மாற்றி உருவாக்கப்பட்டுள்ள புதிய பிரிவுகளின் விஸ்தீரணம் முன்னரை விட அதிகமாக்கப்பட்டுள்ளதனுல், விவசாயிகளைச் சந்தித்து அவர்களுக்கு வேண்டிய ஆலோசனைகளையும், உதவிகளையும் வழங்குவதில் விஸ்தரிப்பு சேவையாளர் அதிக சிரமத்தை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

## ★ ஒரு கடிதம்

## முல்லை மாவட்ட நூலகம்

ஆசிரியர்,
ஈழமுரசு,
யாழ்ப்பாணம்.

அன்புடையீர்,

எமது மாவட்டத்தில் 10 நூல் நிலையங்கள் எமது மாவட்ட அபிவிருத்திச் சபையினுல் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இவற்றுள் முல்லைத்தீவு, முள்ளியவளை, புதுக்குடியிருப்பு ஆகிய நூல் நிலையங்கள் அதிகளவான மக்களுக்கு சேவை செய்கின்றனவாக அமைகின்றன. முல்லைத்தீவு மாவட்டம் எமது நாட்டின் பின்தங்கிய மாவட்டங்களுள் ஒன்று என அனைவரும் அறிவர். நூல் நிலையங்களால் மட்டுமன்றி சகல அபிவிருத்தி விடயங்களிலும் இம்மாவட்டம் பலரின் உதவியை எதிர்பார்த்துள்ளது.

வழமையாக, பல பெரியோர் தம்மிடம் உள்ள நூல்களை பொது நூல் நிலையங்களுக்கு அன்பளிப்புச் செய்வதை நாம் அறிவோம். இவ்வாறுக அன்பளிப்புச் செய்வோர் எமது மாவட்டத்தினையும் மனதில் கொண்டு இந்த உதவியைச் செய்வார்களேயானுல், பேருதவியாக இருக்கும். வேறு பொதுநல விரும்பிகளும் இவ்வாறுன உதவிகளை எமது நூல்நிலயத்திற்கு உதவி செய்ய முன்வருவார்களேயானுல், வரவேற்கத்தக்கது.

எனவே, தங்களுடைய நாளிதழில் இது சார்பாக ஓர் வேண்டுகோளை விடுவீர்களேயானுல், அது சகல மக்களையும் சென்றடையும் என நம்புகின்றோம். எமது நூல் நிலையத்தின் வளர்ச்சிக்கு இது விடயத்தில் உதவி புரிவீர்கள் என எதிர்பார்க்கின்றேன்.

தங்கள் சேவைக் குரிய,
எஸ். டிவகலால
பிரதிச் செயலாளரும்,
உ. உ. உதவி ஆணையாளரும்,
முல்லைத்தீவு.

# தீவுப்பகுதி பஸ்சேவைகள் முற்றாக ஸ்தம்பித நிலையில்

(வேலணை)

வடபிராந்திய போக்குவரத்துச் சபையினுல் தீவுப்பகுதிக்கு நடாத்தப்பட்டு வரும் பஸ் சேவை முற்றுக சீர்குலைந்த நிலையில் இருக்கின்றது.

வடபிராந்தியத்தில் கணிசமான வருவாயைக் கொடுத்து வந்த இச் சேவைக்குறைப்பினுலும், நிறுத்தத்தினுலும் இச்சேவைகளை நம்பியிருப்போர் மிகுந்த கஷ்டங்களை அனுபவிக்கின்றுர்கள் குறிப்பாக சீசன் ரிக்கற் வைத்திருக்கும் பாடசாலை மாணவர்கள் செய்வதறியாது திண்டாடுகிறுர்கள்.

வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கு பணம் கட்டி சீசன் ரிக்கற் எடுத்தது ஒருபுறம், இருக்க தனியார் பஸ் வண்டிகளுக்கும் கட்டணம் செலுத்தி பாடசாலை செல்வதென்றுல் எப்படி முடியுமென ஓர் ஏழை மாணவன் எமது நிருபரிடம் வினவுகின்றுர்.

## உங்களுடையதா?

278405 இலக்கமுடைய அம்பலவாணர் இராஜலிங்கத்துக்குரிய மோட்டார் வாகன சாரதி லைசென்ஸ் கண்டெடுக்கப்பட்டு ஈழமுரசு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர் அடையாளங்காட்டி காரியாலய நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

# ஆறுதல்பெறும் ஆலயத்தில் கொள்ளை நடத்தவேண்டுமா?

(யாழ்ப்பாணம்)

''எத்தனையோ கஷ்டங்களுக்கு மத்தியில் வாழும் சைவமக்கள் தங்கள் கவலைகளையும், வேண்டுதலையும் செய்து வழிபட்டு ஆறுதலும் நிவர்த்தியும் அடையும்தெல்லிப்பளை துர்க்கையம்மன் ஆலயத்திற்கு இக்கதி ஏற்பட்டதே என நினைத்து மேலும் சைவமக்கள் வேதனைப் பட்டுக் கொண்டிருக்கிறுர்கள் ''

இவ்வவாறு சாவகச்சேரி ஸ்ரீ துர்க்கையம்மன் தேவஸ்தானம் விடுத்துள்ள உருக்கமான வேண்டுகோளில் கூறப்பட்டுள்ளது'

இவ்வேண்டுகோளில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: "இக் கோரமான செயலைச் சைவமக்களும், கோவில் அபிமானிகளும் மிகவும் கண்டித்து வருகின்றனர். இந்த ஆலய கொள்ளை சம்பந்தப்பட்டவர்களை பொது மக்களோ அல்லது விடுதலை இயக்கங்களோ கண்டுபிடித்து அவர்களைத் தண்டித்து கொள்ளை போன ஆலய நகைகள். பணம் என்பவற்றைத்திரும்ப ஒப்படைக்க ஆவன செய்வார்களேயானுல் அது சைவ உலகிற்குச் செய்யும் ஓர் மகத்தான தொண்டாக அமையும்.

''தீயவை புரிந்தவர்களை தீயென விரைந்து வந்து தண்டிக்க தவற மாட்டாள் அம்பிகை''என்றும் இவ்வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசாயிகள்- அதிகாரிகள் பிரசன்னம்

# உசனில் நீர்ப்பாசன ஒழுங்கு குறித்து பயனுள்ள முடிவு

(மிருசுவில்)

நீர்ப்பாசன ஒழுங்கு முறை பற்றிய ஆலோசனைக் கூட்டம் ஒன்று அண்மையில் உசன் கிராம அபிவிருத்தி மண்டபத்தில் நடைபெற்றது, மிருசுவில், உசன் பகுதி விவசாயிகள் பெருமளவில் கலந்து கொண்ட இக் கூட்டத்தில் விவசாயம் சம்பந்தமான பல்வேறுபட்ட பிரச்சினைகள் ஆராயப்பட்டன

இப்பகுதியிலுள்ள குளங்களை அதிக நீர் கொள்ளக் கூடியவாறு ஆழமாக்குவதெனவும், வயல்வெளிகளில் தேவைக்கு அதிகமாக தேங்கி நின்று பயிர்களைப் பாதிக்கும் மழை நீரை கால்வாய்கள் மூலம் கடலுக்குப் பாய்ச்சுவதற்கு வேண்டிய நடவடிக்கையினை மேற்கொள்வதெனவும் இங்கு முடிவு எடுக்கப்பட்டது.

மிருசுவில் பகுதி விவசாய விரிவாக்க சேவையாளர் திரு. ச. குணபாலசிங்கம் ஏற்பாடு செய்த இக் கூட்டத்தில் யாழ் மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் திரு. எஸ். கிருஷ்ணபிள்ளை, விவசாய ஆராய்ச்சிப்பகுதியைச் சேர்ந்த மணவள நிபுணர் திரு எஸ் குகதாசன், நீர்ப்பாசன இலாகாவை சேர்ந்த திரு க. நடராசா, தலைமைப்பீட விவசாய உத்தியோகத்தர் திரு எஸ். ரகுபதி உட்பட பல உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கினர்.

பொதுக் கூட்டத்தில் பெருமிதம்

# வட்டு,பிரஜைகள் குழு மூலம் மக்களுக்கு பெரும்பயன்கள்

(சித்தன்கேணி)

''இன்றைய சூழ்நிலையில்வட்டுக்கோட்டைப் பகுதி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்துவதற்கும் அவர்களிடையே காணப்படும் குறைகுற்றங்களைத் தீர்த்து வைப்பதறகும் உணவின்றி பட்டினிச் சாவை எதிர்நோக்கும் ஏழைகளைக் காப்பாற்றுவதற்காகவுமே பிரஜைகள் குழுவை ஆரம்பித்து திறம்படச் செயலாற்றி வருகின்றோம். இப்பிரஜைகள் குழு மூலம் வட்டுக்கோட்டைப் பகுதியிலுள்ள மக்கள் மாத்திரமன்றி அராலி, தோப்புக்காடு, மடத்துவெளி, நீலங்காடு முதலான இடத்து மக்களும் பெரும் பயனடைந்திருக்கிறுர்கள். தொடர்ந்தும் இப்பிரஜைகள் குழு இவர்களுக்கு பல்வேறு விதமான உதவிகளையும் செய்து கொடுக்க ஆயத்தமாக இருக்கின்றது'' இவ்வாறு வட்டுக்கோட்டை வீரபத்திரசிவன் கோவில் முன்றலில் நிகழ்ந்த கூட்டத்தில் திரு. எஸ் சின்னப்பாபிள்ளை பேசுகையில் கூறினர்.

''கடந்த வாரம் எமது குழுவின் இணைச்செயலாளரும் இப்பகுதி விசேட சேவை அலுவலருமான திரு வீ. ரி. கதிர்காமநாதனைப் பற்றி சுவரொட்டிகள் மூலம் சுட்டிக்காட்டப்பட்ட குற்றச் சாட்டுக்கள் அனைத்தும் தவருனவை என்பதை எமது பிரஜைகள் குழு தெரிவிப்பதோடு அவற்றைச் செய்த சக்திகள் குறித்து கண்டனமும் தெரிவித்துக் கொள்கின்றது'' என்றும் அவர் கூறினுர்.

இக் கூட்டத்தில் குழுவின் போஷகரும் இளைப்பாறிய ஆசிரியருமான திரு கி. துரைச்சாமி, பலாலி ஆசிரிய கலாசாலை முன்னுள் விரிவுரையாளர் திரு அ. அரியரத்தினம், இளைப்பாறிய அதிபர் திரு வே தம்பையா, சித்தன்கேணி கணேச வித்தியாலய அதிபர் சைவப்புலவர் திரு. நா. க. தங்கரத்தினம் (நகுலன்) ஆகியோர் உட்பட மற்றும் பலரும் உரையாற்றினர்.

# இடநெருக்கடி நீங்கும் நிலை

(புங்குடுதீவு)

புங்குடுதீவு திருநாவுக்கரசு வித்தியாலயத்திற்கு எனப் புதிய கட்டடம் ஒன்று அமைக்கப் பட்டுள்ளது. எண்பது ஆயிரம் ரூபா செலவில் நிறுவப் பட்டுள்ள இக் கட்டடம் விரைவில் திறந்து வைக்கப்படவிருக்கிறது. இதன் மூலம் இவ்வித்தியாலயத்தில் நிலவும் இட நெருக்கடி பெரிதும் நீங்கிவிடுமென எதிர்பார்க்கப் படுகிறது.

**உதய சிந்தனை**

எங்கெல்லாம் சர்வாதிகாரம் உண்டோ, அங்கெல்லாம் அநீதியும், ஆத்திரமும் உண்டாகவே செய்யும்.

-மகாத்மா காந்தி

37, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி: 23336

## இதய ஒலி

27-3 85 புதன்கிழமை (இரத்தாக்ஷி பங்குனி 14)

# சரத் கண்டுபிடித்த பிச்சைக்காரனின் புண்

இடதுசாரிகள் என்றால் அவர்கள் எப்போதுமே கொஞ்சம் துணிச்சலானவர்கள்.

கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் மேலும் கொஞ்சம் துணிச்சல் கூடியவர்கள்.

போராட்டம், ஆர்ப்பாட்டம், கண்டனம் போன்றவைகளை முன்னின்று நடத்தும் ஆற்றல் இவர்களுக்குக் கைவந்த கலை.

''எத்தனை பேர் எம்மிடம் இருக்கின்றனர்'' என்று இவர்கள் கூட்டல் கழித்தல் கணக்குப் பார்ப்பதில்லை.

ஒவ்வொருவரும் ஒரு லட்சம் பேருக்குச் சமன் என்ற மனோதைரியத்துடன் கம்யூனிஸ்டுகள் பணியாற்றி வருவதை, கம்யூனிஸ நாடுகளின் வரலாறுகளைப் புரட்டுபவர்கள் புரிந்து கொள்ள முடியும்.

இதற்கு இலங்கையும் விதிவிலக்கல்ல என்பதை எங்கள் பாராளுமன்ற நிகழ்ச்சிகளைத் தொடர்ச்சியாக அவதானித்து வருபவர்களால் உணரமுடியும்.

இலங்கைப் பாராளுமன்றத்தில் கம்யூனிஸ்ட் எம் பீக்கள் நிரம்பி வழியவில்லை

'யாராவது ஒருவர் பாராளுமன்றத்தில் தவறி வீழ்ந்தால் தூக்கிவிடும் கை, யாராவது ஒரு ஐக்கிய தேசியக் கட்சி எம். பியினுடையதாக இருக்கும்' என்று சொல்வார்கள்.

ஐந்தில் நான்கு பங்கான எம். பீக்களும் ஐக்கிய தேசியக் கட்சியினராக இருப்பதே இதற்குக் காரணம்.

இங்கிருக்கும் ஒரேயொரு கம்யூனிஸ்ட் எம். பி. சரத் முத்தெட்டுவேகம எந்த விவாதமாக இருந்தாலும், துணிச்சலாக, நேர்மையாக, உண்மையைக் கையில் ஏந்திக் கொண்டு தனது உரையை நிகழ்த்துவதில் வல்லவராக சரத் திகழ்ந்து வருவதை காணமுடிகின்றது.

மாணவர் பிரச்சினையிலிருந்து இனப் பிரச்சினைவரையான சகல சமாச்சாரங்களிலும், தீர்க்கமான தனது கருத்துக்களை, எத்தனையோ எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் எடுத்துக்கூறி, பாராளுமன்ற ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதில் சரத் முத்தெட்டுவேகம முயன்று வருகின்றார்.

ஜனநாயகத்தைத் தேடி லாம்புடன் இலங்கை வந்த குருடன் ஒருவன், காலிமுக பாராளுமன்ற வாசலில் வைத்து லாம்பைப் பறிகொடுத்த கதையைப் பாராளுமன்றத்தில் சொல்லி, இலங்கையில் ஜனநாயகம் எவ்வாறு காப்பாற்றப் படுகின்றது என்பதை மூன்று வருடங்களுக்கு முன்னரேயே எடுத்துக் காட்டியவர் இந்த சரத்.

கடந்த இருபத்து மூன்று மாதங்களாக இந்நாட்டில் அமுலிலிருந்து வரும் அவசரகாலச் சட்டம் ஒவ்வொரு மாதமும் நீடிக்கப்படுவதற்காக பாராளுமன்றம் முன்னால் சமர்ப்பிக்கப் படும்போது பேச்சிலும், செயலிலும் அதனை முழுமையாக எதிர்த்து வந்தவர் இந்த சரத்தான்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எம். பிக்கள் போன்று எதிர்த்துப் பேசிவிட்டு, வாக்களிப்பில் கலந்து கொள்ளாது 'மதில் மேல் பூனையாக' அவர் இருக்கவில்லை.

ஒரேயொரு வாக்கு அவசரகாலச் சட்ட நீடிப்பிற்கு எதிராகக் கிடைத்து வந்துள்ளதென்றால் அது, இந்த சரத்தின் வாக்கு மட்டும்தான்

கடந்த வாரம் அவசரகால விதி நீடிப்பு விவாதத்தின் போது சரத் தெரிவித்த ஒரு உவமை, நிதர்சனமாக மாபெரும் உண்மையாகவே பளிச்சிடுகின்றது

பிச்சைக்காரன் எப்போதும் தனது புண்ணைக் காட்டித் தான் இரந்து பிச்சை கேட்பது வழக்கம்.

அதே போல இந்த அரசாங்கமும் அவசரகால சட்டத்தைக் காட்டி எதையெல்லாமோ சாதித்து வருகின்றது என்று சரத் தெரிவித்துள்ளார்

பிச்சைக்காரனுக்குப் புண் வாய்த்தது போல, இந்த அரசாங்கத்துக்கு அவசர காலச் சட்டம் கிடைத்துள்ளது என்பது சரத்தின் நியாமான வாதம்.

புண் மாறினாலும் பிச்சைக்காரன் பிச்சை எடுப்பதை விட்டுப் போவதில்லை ஏனெனில் அது கலபமான ஒரு தொழிலாகும்.

அதே போல இங்கு இப்போதுள்ள நெருக்கடியும், பிரச்சினைகளும் ஓய்வுபெற்றாலும், அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தை ரத்துச் செய்யுமா என்ற சந்தேகம் பொதுமக்களிடையே எழுவது நியாயமானதே

பிச்சைக்காரனது புண்ணின் கதையாகவே இதுவும் வளர்ந்து கொண்டு போகலாம்!

சரத் கண்டுபிடித்த பிச்சைக்காரனின் புண், காலத்தை உணர்த்தும் கண்ணாடியாகவே தெரிகின்றது.

**இலங்கைத் தமிழ் அகதிகளை ராமேஸ்வரம், மண்டபம் முகாம்களில் சந்தித்துப் பேசியபின்னர், தமிழகத்தின் புகழ்பெற்ற வாரசஞ்சிகையொன்றில் ஏ. சௌந்தரபாண்டியன் என்பவர் எழுதிய கட்டுரையை முழுமையாக இங்கு பிரசுரம் செய்கின்றோம்.**

# குடும்பம் குடும்பமாகக் குவிந்துவரும் ஈழ அகதிகள்

பிரசித்தி பெற்ற ராமேஸ்வரம் கடற்கரையின் அடிவானம் சிவந்து, வெளிறிப்பூக்கும் அதிகாலைப் பொழுதுகளில் தற்போது தென்படும் காட்சிகளைக் காலன் பார்த்தால் கூடக் கண்ணீர் வடித்து விடுவான்.

மன்னார், பேசாலை, நெடுங்கண்டல், அடம்பன், தாழ்வுபாடு முருங்கன், வட்டக்கண்டல், ஆகிய பகுதிகளில் இருந்தும் மற்றக் கடலோரக் கிராமங்களில் இருந்தும் தலைவிரி கோலமாய் வீடு வாசல்களையும் உடைமைகளையும் அப்படியே போட்டுவிட்டு, அழுத விழிகளோடு அகதிகளாய் வந்து சேரும் அபலைகளின் எண்ணிக்கை தற்போது உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது. தனுஷ்கோடிப் பகுதியிலும் ராமேஸ்வரம் மீன்பிடித்துறையிலும் குடும்பம் குடும்பமாய்க் குவிந்தபடி இருக்கின்றனர். நாம் அப்பகுதியை அடைந்த போது, மிகத் தாழ்வான உயரத்தில் இந்திய நேவி விமானம் ஒன்று வட்டமடித்தபடி இருந்தது.

அதுவரை கடலில் தங்கப் பாளமாய்த் தகதகத்த சூரியன் வெளுத்துச் சுள்ளென்று தைத்தது.

கரையில் நின்றவர்களெல்லாம் 'அந்தா ஒரு படகு தெரியுது.' 'இந்தப் பக்கம் ரெண்டு வருது' என்று பரிதாபமாய்க் கூவியபடி பரபரப்புடன் இருந்தனர். சற்று நேரத்தில் சூரியனை இருட்டும் இருள் படிந்த முகத்தில் அப்பியிருக்க, கருவடம் படிந்த மிரண்ட விழிகளோடு நிறைமாதக் கர்ப்பிணிப் பெண்களும் கைக் குழந்தைகளும் பச்சிளம் பாலகர்களுமாய்க் கரையேறித் தள்ளாடி மணலில் விழுந்தனர். ஏற்கனவே வந்து சேர்ந்த தெரிந்த முகங்களைப் பார்த்ததும் பேச வார்த்தைகள் இல்லாமல் வெடித்த குரலில் கதறி அழுவதைப் பார்த்த போது... ஓ எவ்வளவு கொடூரமானவை! பார்க்கச் சகிக்காமல் அருகில் நின்ற போலீஸ்காரர் பக்கம் திரும்பியபோது, அவர் கண்களிலும் நீர்! அவர் அதைச் சமாளிக்க ஆகாயத்தை வெறித்தபடி அண்ணாந்திருந்தார். கரையில் நின்ற அதிகாரிகள், படகுகளில் வந்தவர்களைப் பதிவு செய்யும் 'மாகவீர் தர்மசாலா' சத்திரத்துக்கு அழைத்துச் சென்று கொண்டிருந்தனர்.

ஊரையே ராணுவம் வளைத்துத் தீவைப்பதையும் துடிதுடிக்க இளைஞர்களைச் சுட்டு முச்சந்தியில் டயர்களைப் போட்டுத் தீவைப்பதையும்... நேரில் பார்த்தவர்கள் இன்னும் அந்த மிரட்சியிலிருந்து விடுபடாமல் அரண்டு போயிருக்கின்றனர்.

பாலஸ்தீனத்திலும் வியட்நாமிலும் நடந்த வெறியாட்டம் தோற்றுப் போகும் அளவுக்கு இலங்கையில் கொலை வெறி தலைதூக்கி நர்த்தனமாடுவது ஒவ்வொருவரின் நடுங்கிய குரலிலும் எதிரொலிக்கிறது.

எனட்டாவிலிருந்து வந்துள்ள எட்டாம் வகுப்பு படிக்கும் பன்னிரண்டு வயது சிறுமி மஞ்சுவிடம் பேசிக்கொண்டிருந்தபோது, அவள் மழலையில் மிரண்டு மிரண்டு சொல்கிறாள்.

''நான் இஸ்கூலுக்குப் போகும்போது ஜீப்பில் ஆமி (ஆர்மி) வந்தது. அப்பம்மா நான் எல்லாம் ஒரு இடுக்கில் ஒழிஞ்சு கொண்டம். புத்தகப் பைகளோட வந்த என்ட பொடியன்களைச் சுட்டார்கள். மாரெல்லாம் ரத்தம், கீழே கிடந்த பெடியன்கள் கால் மேலே ஜீப் ஏறிப் போச்சுது. சடசடன்னு சத்தம் கேட்டுச்சு நான் கண்கள மூடிக்கிட்டன் அப்புறம் நான் வீட்டைவிட்டு வெளியேற மாட்டேன், பள்ளிக்கும் போறதில்லை. வீட்டில் சாப்பிட எதுவுமில்லாமல் பட்டினியாகக் கிடப்போம். எப்பவாவது அம்மா சமையல் பண்ணும். அப்ப வெடிச் சத்தம் கேட்கும், புறக்கடை வழியா எல்லாம் காட்டுக்குள் ஓடிப்போய் படுத்துக்கொள்வம். காட்டுக்குள் ஆமிவராது அங்க டைகர் அங்கிள்ஸ் இருப்பாங்கன்னு பயம்.

'ஒருநாள் அடம்பன் தமிழர்களைச் சுட்டு, பொணங்களை எங்க வீட்டு வழியா லோரிகளில் ஏற்றி வந்தார்கள் லோரிகள் போனபாதை எல்லாம் சொட்டுச் சொட்டா ரத்தம் கிடக்கும். நான் இனி அங்கு போகமாட்டேன் என் புத்தகங்கள், நோட்டெல்லாம் கொண்டு வந்திட்டன். சிங்களப்பிள்ளைகள் எல்லாம் பார்த்தால், தமிழ்பிள்ளையெண்டு சுதைக்காதுகள்'' என்று கைகளை விரித்து மஞ்சு சொல்லிக் கொண்டிருந்த போது, உதடுகளும் விரல்களும் லேசாய் நடுங்கியபடி இருந்தன.

இரண்டு மாதக் கைக்குழந்தையுடன் அப்போதுதான் படகிலிருந்து இறங்கிய புனிதம் (நெடுங்கண்டல்அடம்பன்) தலைவிரி கோலமாய். தலையிலும் உடம்பிலும் மணல்துகள் படிய வந்து நின்றார்.

''ஐயோ ஆண்டவனே'' நாங்கள் பட்ட கொடுமை சொல்ல ஆயுள் போதாது எங்களொத்த வயசுக் கொமருகளை (பெண்களை) ராணுவம் தூக்கிக் கொண்டு போய்க் கெடுத்து நாசம் பண்ணுகிறது எங்கள் வீட்டைச்சுற்றிப் பத்தைந்து பேரை இப்படி நாசம் பண்ணினார்கள் என் தோழி ஒருத்தி அவமானத்தில் செத்துப் போனாள். என் அண்ணனைப் பிடரியில் அடித்து ராணுவம் இழுத்துப் போனது என்ன ஆச்சோ தெரியலை'' என்று அவர் சொல்லும்போது வார்த்தைகள் உடைந்து அழுகை பீரிட்டுக் கொண்டு வந்தது.

தாழ்வுபாடு பி ஜஸ்டின் திரம் சொல்லும் போது.

எங்கள மீன் பிடிக்க விடமாட்டாங்க எத்தனை நாளைக்குப் பயந்துகொண்டு கிடப்பம்? 'தேடுதல் வேட்டை' என்று சொல்லி, விடுதலைப் புலிகளைப் பிடிப்பதாகச் சொல்லி அப்பாவிகளைச் சுட்டுக் கொல்கிறார்கள். கொள்ளையடிப்பதற்கும் கற்பழிப்பதற்கும்தான் இவர்கள் 'தேடுதல் வேட்டை' என்று சொல்லி ஊருக்குள் இறங்குகிறார்கள். மொத்தம் 500பேர் வரை ஜீப்புகளிலும் ராணுவ வண்டிகளிலும் வருவார்கள். வந்து ஊருக்கு அப்பால் வண்டிகளை நிறுத்தி விட்டு முந்நூறு பேர் ஊரைச் சுற்றி வளைத்துக் கொள்வார்கள். மீதமிருப்பவர்கள் ஊருக்குள் நுழைந்து கொள்ளையடிப்பார்கள் 'பாம்' வைப்பார்கள். யாரும் தப்பி ஓட முடியாது. பிணத்தையும யாரும் போய்த் தூக்கக் கூடாது... என்றார் விரக்தியுடன்.

இப்படி சோகக் கதைகளுடன் ராமேஸ்வரத்துக்கு வந்து சேர்பவர்கள். அங்கிருந்து மண்டபம் கேம்புக்கு அழைத்து வரப்படுகிறார்கள். அங்கே மருத்துவ உதவியளிக்கப்பட்டு, பாய். அரிக்கேன் விளக்கு, துணிமணிகள் போன்றவை அரசால் வழங்கப்பட்டு கேம்பில் சில தினங்கள் குடியமர்த்தப்படுகின்றனர் பின் அங்கிருந்து வெவ்வேறு ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர். மண்டபம் முகாம் போர்க்கால நடவடிக்கையில் இயங்கி இரவு பகலாக வேலைகளைக் கவனித்து வருகிறது.

மண்டபம் முகாமில் நாம் நுழைந்த போது மருத்துவப் பணி படு சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தது. அங்கே தன் மனைவி குழந்தைகளுடன் அமர்ந்திருந்தார் டாக்டர் செல்வ மகேந்திரன் விடுதலைப் புலிகளுக்கு மருத்துவம் பார்த்ததாகக் காரணம் சொல்லி அவரை கைது செய்து கொண்டுபோய்ப் படாதபாடு படுத்தியுள்ளவர்கள். 'ஐந்தரை அடி நீளம், ஒன்பதடி அகல அறைக்குள் பத்துப் பதினைந்து பேரைப் போட்டு அடைத்து வைப்பார்கள். ரப்பர் பையில் மணலை நிரப்பி முதுகுத் தண்டில் அடித்தார்கள். நெருப்பால் சுட்டார்கள்'' என்று கூறி காயத்தைக் காண்பித்துக் கொண்டிருந்தபோது, விளையாடிக் கொண்டிருந்த அவரின் ஐந்து வயதுப் பெண் குழந்தை சுபத்ரா 'வீல்' என்று அலறிக் கொண்டு ஓடி வந்து தன் தாயின் கழுத்தைக் கட்டிப் பிடித்துக் கொண்டாள். டாக்டரின் மனைவி பதறிப் போய் ''என்ட மகளே ... என்ன விஷயம்?'' என்று கேட்கவும், ''ஆமி! ஆமி வருது!'' என்று அரண்டு போய், நம் காவல் துறை ஜீப்பைக் காட்டியது. ''பயப்படாதே! இது சிங்கள ஆமி இல்லே. உன் அங்கிள்ஸ் துவக்கே (துப்பாக்கி) இல்ல பார். நீ போய் பயப்படாமல் கதைக்கலாம்'' என்று விரக்தியுடன் சொல்லியும் சுபத்ரா நம் போலீசை மிரண்டு மிரண்டு வெறித்தபடி இருந்தாள்.

நாளுக்கு நாள் பாரதமாதாவின் பாதத்தினடியில் புரையோடிக் கொண்டிருக்கும் இந்தப் புண் எப்போது, எந்த சிகிச்சையால் ஆறும் என்பது எல்லோராலும் கேட்கப்படும் ஒரு கேள்வியாகி விட்டது நாள்பட்டுப் புரையோடிவிட்ட புண்ணுக்கு அறுவைச் சிகிச்சை தானுமே வைத்தியம். அது எப்போது? என்றுதான் எதிர்பார்த்தபடி இருக்கிறார்கள்..!

### ஜெனீவா பேச்சுக்குறித்து ரஷ்யத்தலைவரின் அறிவிப்பு

# நியாயபூர்வ இணக்கமும் சம பாதுகாப்பும் தேவை!

(மாஸ்கோ)

ஜெனீவா ஆயுதப்பரிகாரணப் பேச்சுவார்த்தைகள் குறித்துப் புதிய சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் தலைவர் திரு கொர்பசெவ் தமது நிலைப்பாட்டினை விரிவாக விளக்கியுள்ளார். சமாதான முன்னேற்றப்பாதையில் சோவியத் யூனியன் தனது வெளிநாட்டுக் கொள்கையைத் தொடர்ந்தும் கடைப்பிடிக்கும் என்று அவர் தெரிவித்துள்ளார். தமது வெளிநாட்டுக் கொள்கை மாறுபடாதிருக்கும் என்பதனை மிக ஆணித்தரமாக எடுத்துரைத்துள்ளார் ஜெனீவாவில் அமெரிக்காவுடன் நடைபெறும் ஆயுதப்பரிகாரணம் தொடர்பான பேச்சுவார்த்தைகளை ஆயுதப்போட்டியை வலுப்படுத்துவதற்குச் சாட்டாகப் பயன்படுத்திக் கொள்ளாமல் ஆயுதக்குறைப்புக்காக உண்மையிலேயே பாடுபடவேண்டும் என்றும் அணு ஆயுத உற்பத்தி குறைப்பதற்கு இருசாராரிலும் நல்லெண்ணமும், தெளிவான புரிந்துணர்வும அவசியமென்றும் நியாயமான இணக்கத்துக்குத் தயாராக இருக்க வேண்டும் என்றும் அவர் வற்புறுத்தியுள்ளார்.

இதேவேளை திரு கொர்பசெவ் அணுஆயுதப் பரிகரணம் தொடர்பான ஆலோசனைச் சபையிடம் ஆலோசனை ஒன்றினையும் சமர்பபித்துள்ளார்.

அணு ஆயுதப் பரிசரணப் பேச்சுவார்த்தைகளின் போது சமத்துவ சமபாதுகாப்புக் கொள்கைகளையும் அனுசரித்தல் அவசியம் என்றும் அவர் தெளிவு படுத்தியுள்ளார்.

புதிய கம்யூனிஸ்ட் தலைவராகப் பொறுப்பேற்றதன் பின்னர் அவர் வெளியிட்டுள்ள விரிவான தன்னிலை விளக்கம் இதுவே என்பது குறிப்பிடத்தக்கது.

### அதிக வேலைவாய்ப்புகள் கோரி

## பாரிஸில் தொழிற்சங்கம் பெரும் ஊர்வலம் நடத்தியது

(பாரிஸ்)

பாரிஸில் கம்யூனிஸ்ட் ஆதிக்கத்தில் உள்ள சி. ஜி. ரி. என்ற தொழிற் சங்கம் இளைஞர்க்குக் கூடுதல் வேலை வாய்ப்புகள் வேண்டும் எனக் கோரி மாபெரும் ஊர்வலம் ஒன்றினை நடத்தியது.

இதில் இருபது ஆயிரத்துக்கும் முப்பதாயிரத்துக்கும் இடைப்பட்ட மக்கள் கலந்து கொண்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

### வளைகுடாப்போர் வேகம் கூடுகிறது

## குடியிருப்பாளர் பகுதிகளில் மீண்டும் தொடர் தாக்குதல்

(பாஹ்ரென்)

வளைகுடா யுத்தத்தில் ஈராக்கும், ஈரானும் மீண்டும் குடியிருப்பு இலக்குகளைத் தாக்கத் தொடங்கியுள்ளன என்று அறிவிக்கப்படுகிறது.

ஈராக் அதிபர் சதாம் ஹுசெய்னின் அரண்மனை அருகே ஏவுகணை ஒன்று வெடித்ததாகவும் திடுக்கிடும் தகவல் வெளியாகியுள்ளது

ஈராக், ஈரானின் நான்கு விமானங்களைச் சுட்டு வீழ்த்தியதாக அறிவிக்கப்பட்டபோதிலும் ஈரான் இதனை மறுத்துள்ளது பாக்தாத்தில் நடந்த தாக்குதலில் எண்மர் பலியானதாகவும் கூறப்படுகிறது.

### பிரதம மந்திரி ராஜீவ் காந்தி உறுதி

## நமீபிய பிரச்சினையில் பாரத உதவி தொடர்ந்து இருக்கும்

(லண்டன்)

நமீபிய சுதந்திரப் போராட்டத்தற்குத் தொடர்ந்தும் ஆதரவு வழங்குவதில் பாரதம் பின் நிற்காது என்று பாரதப் பிரதம மந்திரி திரு. ராஜீவ் காந்தி மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளார்

தென்மேற்கு ஆபிரிக்க நாடுகளுக்கான பாரதத்தின் உதவி பற்றித் தன்னைச் சந்தித்த மேற்படி பிரதேசப் பிரதிநிதியிடம் அவர் வெளிப்படையாகத் தெரிவித்தார்.

## எரிபொருட்களின் விலைகள் பாரதத்தில் குறைந்தன

(புதுடில்லி)

பாரதத்தில் மண்ணெண்ணெய், டீசல் விலைகள் ஒரு லீட்டருக்கு ஏழு பைசா வீதம் குறைக்கப்பட்டுள்ளது. உயர்ரக சிகரெட்டுக்கு ஒரு பைசா அதிகரிக்கப்பட்டுள்ளது.

நிதியமைச்சர் திரு விஸ்வநாத் பிரதாப்சிங் லோகசபையில் மத்திய பட்ஜெட் மீதான பொது விவாதத்தின்போது இதனைத் தெரிவித்தார்.

நிதியமைச்சர் அங்கு பேசுகையில் மாநிலங்கள் சில ஒத்துழைப்புத் தராவிடினும் மத்திய அரசு ஏழ்மைக்கு எதிரான போராட்டத்தைத் தொடரும்'' என்றார்.

## ஜனாதிபதி எர்ஷாத்தின் அறிவிப்பு

(டாக்கா)

பங்களாதேஷில் உள்ள அரசியல் கட்சிகள் பொதுத் தேர்தல் நடத்தக் கூடிய சூழ்நிலையை எப்போது உருவாக்கின்றனவோ அப்போதுதான் பொதுத் தேர்தல் நடத்தப்படும் என்று ஜனாதிபதி லெப்டினண்ட் ஜெனரல் எர்ஷாத் அறிவித்துள்ளார்.

## சிங்கை - பாரத கப்பல் சேவை

(புதுடில்லி)

பாரதத்துக்கும், சிங்கப்பூருக்கும் இடையிலான பயணிகள் கப்பல் போக்குவரத்தில் தோன்றியுள்ள நெருக்கடி நிலை குறித்து நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

சிதம்பரம் கப்பல் தீ விபத்தால் பயணிகள் போக்குவரத்துக்குப் புதிய கப்பல் ஒன்று கொள்வனவு செய்ய வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## சுட்டுக்கொலை

(லண்டன்)

கிழக்கு பேர்லினில் கடமையிலீடுபட்டிருந்தவேளை இராணுவ அதிகாரி ஒருவர் ஓர் அமெரிக்கரால் சுட்டுக் கொலை செய்மப்பட்டுள்ளதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

### வருடம் 30 கடந்தாலென்ன

## ஜனாதிபதி தம்பதி இதயம் ★ இளமை - இனிமை ★

(லண்டன்)

கல்யாணம் புரிந்து வருடங்கள் முப்பது கடந்து விட்ட பின்பும் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி மார்க்கோஸும் அவர் மனைவி இமெல்டாவும் இனிமை — இளமை இதயங்களுடன் ஒருவரையொருவர் நேசித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாண்டித்தியம் பல பெற்றுள்ள இமெல்டா ரஷ்ய ஜனாதிபதி செர்னன் கோவின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ளச் சென்றிருந்த குறுகிய காலப் பயணவேளையிலும் கணவரின் பிரிவாற்றுமை தாங்காது ஓர் காதல் கவிதை எழுதியிருந்தார் என்றும் கணவரும் தமக்கிடையே வெளிநாட்டுப் பயணங்களின்போது சிறிது பிரிவே உண்டாகினும் காதல் உணர்வுசொட்டும் கடிதம், கவிதை வரைந்து கொள்வார் என்றும் தெரிவிக்கப்படுகிறது டீன்ஏஜ் தம்பதி போல் இன்னமும் இவர்கள் இனிமை — இளமை இணைந்து இதயங்களுடனே ஜீவிக்கின்றனராம்.

### "சண்முகம் மீது வழக்கிருக்க அவர்

## மந்திரியாக நியமனமானது எப்படி?" தி.மு.க கேள்வி

(சென்னை)

நீதிமன்றத்தில் திரு. ப. உ. சண்முகம் மீது ஓர் வழக்குத் தாக்கலாகியிருக்கும் போது அவர் ஊரகத்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டதுஎப்படி? அது நியாயத்துக்குப் புறம்பானதல்லவா? இவ்வாறு தமிழ் நாடு சட்டசபையில கணை தொடுத்தார் திராவிட முன்னேற்றககழக உறுப்பினர் திரு. ரகுமான் கான்.

இவ்விஷமீது சபையில் சற்று நேரம் காரசாரமான விவாதம் நடைபெற்றது.

குறிப்பிட்ட வழக்கு வாபஸ் பெறப்படவுள்ளதாகவும் அவ்வழககில் தான் குற்றவாளியென நிரூபிக்கப்பட்டால். தான் பதவிதுறக்கத் தயார் என்றும் அமைச்சர் திரு. சண்முகம் தெரிவித்தார்.

திரு ஜோர்ஜ் பெர்ணண்டஸ் மீது வழக்குத் தாக்கலாகியிருக்கும் போது அவர் மத்திய அமைச்சராக நியமிக்கப்பட்டார் என்று கூறிய இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் எனவே இந்நியமனம் ஒன்றும் நியாயத்துக்குப் புறப்பானதல்ல என்று கூறினார்.

## நரசிம்மராவ் சோவியத் விஜயம் மேற்கொள்கிறார்

பாரத பாதுகாப்பு மந்திரி திரு. பி. வி. நரசிம்மராவ் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு சோவியத் யூனியன் வரவிருக்கிறார் பாதுகாப்பு ஏற்பாடுகள் உட்பட பல்வேறு முக்கிய விடயங்கள் குறித்தும் இச்சந்திப்பின்போது ஆராயப் படவுள்ளன.

### சபையில் உள்துறை மந்திரி பேச்சு

## பஞ்சாப் நிலைமை மாமூலாக மேலும் சிலகாலம் பிடிக்கும்

''பஞ்சாப்பில் அவசியமின்றி ஒரு நள் கூட ஆளுநர் ஆட்சி நீடிக்கப்பட மாட்டாது. மாநிலத்தின் நிலை அரசினால் கவனமாகக் கண்காணிக்கப்பட்டு வருகிறது. அங்குநிலைமை மாமூலாகசில காலம்பிடிக்கும்'' என்று உள்துறை மந்திரி திரு. எஸ். பி. சவான் லோகசபையில் பேசுகையில் கூறினார்.

பஞ்சாப் மாநிலத்தில் வன்முறைகள் மீண்டும் தலைதூக்கியுள்ளது என்பது தெரிந்ததே.

## டமாஸ்கஸில் லெபனான் சிரியத் தலைவர்கள் சந்திப்பு

(டமாஸ்கஸ்)

சிரியா தனது ஆதரவினை லெபனான் தேசிய ஐக்கிய அரசுக்கு அளிக்கும் என்று லெபனான் தலைவர் அமீன் ஜமாயலுக்கு சிரியத் தலைவர் அசாத் தெரிவித்துள்ளார்.

டமாஸ்களில் நடைபெற்ற இருதலைவர்களுக்கும் இடையிலானச் சந்திப்பின்போது இவ்வுறுதிமொழி அளிக்கப்பட்டது

லெபனான் கிறீஸ்தவக் கிளர்ச்சிக் காரர்களின் சவாலுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ள நிலையில் இவ்வுறுதி அளிக்கப்பட்டிருக்கிறது. லெபனானின் உள்ளூர் பிணக்குகளை அதிகரிக்கச் செய்ய இஸ்ரேல் நடத்தும் தூண்டுதலே லெபனான் அரசு மீதான எதிர் நடவடிக்கைக்குக் காரணம் என்று சிரியாவின் முஸ்லீம் தலைவர்களுடன் பத்திரிகைகளும் குற்றஞ் சாட்டியுள்ளன.

### வியட்னாமிய பாதுகாப்பு மந்திரி

## முதல்தடவையாக ஒருவார பாரத விஜயம் செய்கிறார்

(லண்டன்)

வியட்னாமியபாதுகாப்பு மந்திரி பாரதத்தில் ஒருவரா கால உத்தியோசபூர்வ விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

சோஷலிஸ்ட் குழுவைச் சேராத நாடொன்றுக்கு வியட்னாமியப் பாதுகாப்பு மந்திரி விஜயம் செய்வது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

### பிரிட்டிஷ் வார ஏடு தொடுக்கும் பலமான குற்றச்சாட்டு

## மேற்குநாடுகளுக்குபோதைப்பொருள் குவிவதற்கு காரணம் பாகிஸ்தான்

(லண்டன்)

மேற்கு நாடுகளுக்கு ஹீரோயின் போதைவஸ்துகள் ஏராளமாகக் கடத்திச் செல்லப்படுவதற்கு பாகிஸ்தானே பொறுப்பாக இருந்துவருகிறது என்று பிரிட்டிஷின் பிரபல வாராந்த சஞ்சிகையான 'சண்டே ரைப்ஸ்' செய்தி வெளியிட்டுள்ளது.

இக்கடத்தல் குற்றச்சாட்டில் தண்டனை விதிக்கப்பட்டோரிடம் இருந்து பாகிஸ்தானின் பொலிஸ் மற்றும் போதை வஸ்துத் தடுப்பு அதிகாரிகள் லஞ்சம் பெற்றுக்கொண்டு கடத்தல் நாடகம் தொடர அவர்கள் உடந்தையாக இருப்பதாக இச்சஞ்சிகை குற்றஞ்சாட்டியுள்ளது.

இதன் விளைவாக ஹீரோயின் விற்பனைச் சந்தை கராச்சியில் ஓகோவென்று நடைபெறுகிறது என்ற தகவலையும் இச்சஞ்சிகை வெளியிட்டுள்ளது.

ஐரோப்பாவிலும், மத்திய அமெரிக்காவிலும் விற்கப்படும் ஹீரோயின் போதைவஸ்துவின் மிகப் பெரும் பகுதி பாகிஸ்தானில் இருந்தே வருகிறது, மேற்கத்தைய போதை வஸ்து வேவுபார்க்கும் அதிகாரிகள் தம் முயற்சியில் வெற்றி பெறுமைக்கு இப் பாகிஸ்தான் ஊழலே காரணம் என்றும் கூறியுள்ள இச்சஞ்சிகை எனினும் மேற்கத்தைய நாடுகள் இதற்கான எதிர் நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளன என்றும் கூறியுள்ளது.

27. 3 1985 புதன்கிழமை

ஈழமுரசு

விமான டிக்கட்டுகளை மலிவாகப் பெறுவதற்கும்
★ பிரான்ஸ் ★ ஜேர்மனி
மற்றும் நாடுகளுக்குச் செல்வதற்கான
பிரயாண ஒழுங்குகளைச் செய்வதற்கும்
யாழ்நகரில் நம்பிக்கையான ஸ்தாபனம்:
TET
ரான்ஸ் யூரோ ரவல்ஸ்
தொடர்பு: S. K. மகேந்திரராஜா
இல 6, நவீன சந்தை (மேல்மாடி), யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23831

# ஒரு மாதத்தில் பாஸ்போட் கிடைக்கவேண்டுமா?

## வழிவகைகளை திணைக்களம் விளக்கியுள்ளது

புதிதாக பாஸ்போர்ட்பெற விரும்புபவர்கள் என்னென்ன பத்திரங்களை விண்ணப்பத்துடன் சமர்பிக்க வேண்டுமென்று குடிவரவு குடியகல்வு திணைக்கள ஆணையாளர் பொது மக்களுக்கு அறியக் கொடுத்துள்ளார்.

இது தொடர்பாக சுற்றறிக்கையொன்று சகல அரசாங்க அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது

விண்ணப்பதாரிகள் 16 வயதுக்கு உட்பட்டவர்களாயின் அடையாள அட்டையை காண்பிப்பதுடன், அடையாள அட்டையின் போட்டோ பிரதியையும் இணைக்க வேண்டும்.

பிறப்புப்பதிவுப்பத்திரத்தின் மூலப் பிரதிகட்டாயம் இணைக்கப்படல் வேண்டும் மூலப் பிரதியைத் திரும்பப் பெற விரும்புவதாயின் அதனுடன் சேர்த்து போட்டோப் பிரதியொன்றையும் இணைக்க வேண்டியது அவசியமாகும்.

ஆறுரூபா முத்திரை ஒட்டப்பட்ட 8 அங்குலம் X 5 அங்குலம் அளவான சுய விலாசமிடப்பட்ட என்வலப்பையும் விண்ணப்பத்துடன் சேர்த்து ஒப்படைக்க வேண்டும்

சகலநாடுகளுக்குமான பாஸ்போர்ட் பெற 15,000 ரூபா பெறுமதியான சொந்த பிணைப் பத்திரத்தில் ஒருவர் பிணை நிற்க வேண்டும்.

வருமானவரி கட்டுபவர்கள் செல்வ வரி கட்டுபவர்கள் ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட அடிப்படை மாதச் சம்பளம் பெறும் அரசாங்க உத்தியோகத்தர்கள், ஆயிரத்து இருநூற்று ஐம்பது ரூபாவுக்கு மேற்பட்ட அடிப்படைச் சம்பளம் பெறும் வர்த்தக அல்லது கூட்டுத்தாபன உத்தியோகத்தர்கள் பிணை நிற்பதற்குத் தகுதியானவர்கள் என்றும் இங்கு தெரிவிக்கப்பட்டுள்ளது

விண்ணப்பதாரர்கள் பிரயாணம் செய்ய எண்ணியிருக்கும் தினத்துக்கு ஆகக் குறைந்தது ஒரு மாத காலத்துக்கு முன்னர் விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

## 14 லட்சம் ரூபா தங்கத்துடன் 3 பெண்கள் பிடிபட்டனர்

இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு பதின்நான்கு இலட்சம் ரூபா பெறுமதியான 23 தங்கப் பாளங்களைக் கடத்திச் செல்ல முற்பட்ட மூன்று பெண்கள் நேற்று கட்டுநாயக்கா விமான நிலையத்தில் கைது செய்யப் பட்டார்கள்.

இது பற்றி விசாரணை நடத்திய சுங்க அதிகாரி தங்கப் பாளங்களைப் பறிமுதல் செய்து இவர்களுக்கு 44 இலட்சம் ரூபா அபராதம் விதித்தார். இவ் அபராதத் தொகையை அவர்களால் செலுத்த முடியாததால் பொலிசாரிடம் கையளிக்கப்பட்டார்கள்.

## இலங்கை கடற்படையின் ஊடுருவல் பற்றி இந்திய அரசு ஆட்சேபம்

(புதுடில்லி)

இலங்கைக் கடற்படையினர் இந்தியக் கடல் எல்லைக்குள் ஊடுருவுவது பற்றி முறைப்படி இலங்கை அரசிடம் இந்தியா கடுமையான ஆட்சேபம் தெரிவித்திருப்பதாக இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் திரு பி. வி நரசிம்மராவ் நேற்று லோக் சபாவில் தெரிவித்தார்.

அமைச்சர் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில், பாக்கு நீரிணையில் இலங்கைக் கடற்படையின் ஊடுருவலை அடுத்து இந்தியக் கடலாதிக்க எல்லைக்குள் கடலோர காவற்படை மற்றும் கடற்படை ரோந்துக் கப்பல்களின் ரோந்துப் பணிகள் தீவிரமாக்கப்பட்டுள்ளதாகவும் சொன்னார்.

விமான மூலமான கண்காணிப்பும் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

தென்கிரபட்டணம், அந்தமான் நிக்கோபார் தீவுகள், லட்சத் தீவுகள் ஆகியவற்றில் விமானப படையின் பல பிரிவுகள் அமைக்கப்படவுள்ளதாகவும், கர்நாடகாவில் உள்ள கார்தா பகுதியில் கடற்படைத் திட்டம் ஒன்றை தொடங்கும் யோசனையை அரசு ஆராய்ந்து வருவதாகவும் திரு. நரசிம்மராவ் தெரிவித்தார்.

## இவர்களுக்கும் இனிமேல் விஞ்ஞான பட்டதாரிப் படி

தூயகணிதம், பிரயோக கணிதம் ஆகிய பாடங்களுடன் ஏதாவதொரு கலைப்பாடத்தையும் பட்டத் தேர்வுக்கு எழுதிச் சித்தியடைந்த கலைமாணிப் பட்டதாரிகள் அனைவரும் விஞ்ஞானமாணிப் பட்டதாரிகளாகக் கணிக்கப்பட்டு விஞ்ஞான பட்டதாரிகளுக்குரிய உயர் வான சம்பளம் வழங்கப்படல் வேண்டும் எனக் கல்வி அமைச்சு யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்துக்கு உத்தரவிட்டுள்ளது

இவ்வாறான பட்டதாரிகளுக்கு இதுவரை கலைப்பட்டதாரிகளுக்குரிய சம்பளம் வழங்கப்பட்டது முறையற்றது என இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த மகாசிவம் கல்வி அமைச்சின் கவனத்துக்குக் கொண்டு சென்றதையடுத்து மேற்கண்டவாறு கல்வி அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

## பிரபாகரன் விசாரணையில்

(மட்டுநகர்)

களுவாஞ்சிக்குடி, கிரான்குளம் ஆகிய இடங்கள் நேற்றுமாலை சுற்றி வளைக்கப்பட்டதைத் தொடர்ந்து பலர் விசாரணைக்காகக் கொண்டு செல்லப்பட்டனர். இங்குள்ள தபாலகம் ஒன்றில சிற்றூழியராகக் கடமையாற்றும் பிரபாகரன் என்பவர் துருவித் துருவி விசாரிக்கப்பட்ட பின்னர் மேல் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டார்.

### 1983க்கு முன்..

—1ம்- பக்கத் தொடர்

அனுப்பப்பட்ட போதும் பட்டதாரிச் சான்றிதழின் செயற்படும் திகதி 1984 ஜனவரி முதலாந் திகதியென இருந்த காரணத்தினால் யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களம் உரிய சம்பளம் கொடுக்க மறுத்திருந்தது.

இதனால் பாதிப்படைந்த ஆசிரியர் சார்பாக இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சின் கவனத்திற்கு மேற்படி விடயத்தைக் கொண்டு வந்ததை அடுத்து, இவ்வாறான பணிப்புரையை யாழ் பாணம் கல்வித் திணைக்களத்துக்குக் கல்வி அமைச்சு வழங்கியது.

### யாழ். தனியார்..

—1ம்- பக்கத் தொடர்

துள்ளார்கள்.

ஒருங்கிணைந்தரீதியில் செயற்படுவதன் மூலம் அடாவடித்தனத்தைக் கட்டுப்படுத்தவும், விடுதலைப் போராட்டத்திற்குக் காத்திரமான பங்களிப்பைச் செய்ய முடியுமெனவும் யாழ்ப்பாணம் தனியார் பேருந்துச் சேவை அமைப்பு விடுத்துள்ள பிரசுரத்தில் சுட்டிக்காட்டியுள்ளது.

### ஆசிரிய கலாசாலை

## அதிபருக்கு பிரியாவிடை

பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் அதிபராக கடந்த ஒன்பதாண்டுகளாகக் கடமையாற்றிய திரு. இ. கனகலிங்கம் ஓய்வு பெறுவதை முன்னிட்டு கலாசாலை ஆசிரிய மாணவர்களால் இன்று புதன்கிழமை பிரிவுபசாரம் நடத்தப்படுகின்றது.

### திருநெல்வேலியில்...

—1-ஆம் பக்கத் தொடர்

அட்டைகளைத் தாங்கியவாறே பெண்கள் உண்ணாவிரதம் இருந்தார்கள்.

உண்ணாவிரதிகள் அனைவரும் அமைதியாகப் பக்திப் பாடல்களை இசைத்தவாறே காணப்பட்டார்கள் சிலரின் கண்களில் கண்ணீர் கசிந்திருந்ததையும் காணக் கூடியதாக இருந்தது.

மாஸ்டர். இடி அமீன் சுரேன் எங்கே என்று கேட்டு பெரியளவிலான சுவரொட்டிகளும் இப்பகுதியில் ஒட்டப்பட்டிருந்தன

### கிளிநொச்சியில்..

—1ம் பக்கத் தொடர்

இவர் பின்னர் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் இருந்து ஆயுதங்களுடன் சென்ற இளைஞர்களால் கடத்திச் செல்லப்பட்டு மீண்டும் அதே இடத்தில்வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டார்.

போராளிகளைக் காட்டிக் கொடுத்தல், ராணுவத்திற்குத் தகவல் கொடுத்தல், அண்மையில் நான்கு போராளிகளைக் காட்டிக் கொடுத்தது ஆகிய குற்றச்சாட்டுகள் இவர்களுக்கு எதிராகத் தெரிவிக்கப்பட்டிருந்தன.

### இன்று

## பகிஷ்கரிப்பு

(கிளிநொச்சி)

அரசாங்கத்தின் புதிய பல்கலைக்கழகத் திருத்தச் சட்டத்தை ஆட்சேபித்து கிளிநொச்சியிலுள்ள சகல பாடசாலைகளும் இன்று பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளன. மாணவர் பேரவை இதற்கான அழைப்பை விடுத்துள்ளது.

## பஸ்ஸில் நடந்த சிறு கொள்ளை

நேற்று முன்தினம் கிளிநொச்சியிலிருந்து பருத்தித்துறை வந்த பஸ் பழுதடைந்து பளையில் நின்றவேளை, அங்கு வந்த இனம் தெரியாத ஆறுபேர் அந்த பஸ்ஸில் இருந்த ஆறு ஆசனங்கள், பற்றரி, பக்கக் கண்ணாடி ஆகியவற்றை எடுத்துச் சென்றுள்ளனர்.

### அமிர் எவருடனும்..

—1ம்- பக்கத் தொடர்

வும் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கிடையே திரு. அமிர்தலிங்கம் பூரண சுகம் பெற வேண்டி பல ஆலயங்களிலும் பூஜை, வழிபாடுகள் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன.

நாளை வியாழக்கிழமை பாஷையூர் அர்ச் அந்தோனியார் தேவாலயத்திலும், வெள்ளிக்கிழமை காலை பத்து மணிக்கு வண்ணை வெங்கடேச வரதராஜப் பெருமாள் தேவாலயத்திலும், 31ம திகதி ஞாயிற்றுக்கிழமை செல்வச் சந்நிதியிலும் சிறப்புப் பூஜைகள் இடம் பெறும்

### கிளிநொச்சி சம்பவ...

—1ம்- பக்கத் தொடர்

மாக நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தினால் பலர் காயமடைந்துள்ளதாக அறிவிக்கப் பட்டுளளது.

### மகாசங்க..

—1ம்- பக்கத் தொடர்

கப் பீடாதிபதிகளைச் சந்தித்து உரையாடியதாக மீந்திக்கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. சுமார் அரைமணி நேரமாக இச்சந்திப்பு இடம்பெற்றதாம்.

## எண்ணெய் விநியோகம் சீர்குலைவு

(ஊர்காவற்றுறை)

அண்மையில் கடத்திச் செல்லப்பட்ட ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான பவுசர் வண்டி இதுவரையில் திரும்ப ஒப்படைக்கப்படாததால் மண்ணெண்ணெய்யை மக்களுக்கு சீராக விநியோகிப்பதில் இச் சங்கம் பெரும் பிரச்சினையை எதிர் நோக்கியுள்ளது. இதற்கு முன்னர் இச் சங்கத்தில் பல லட்சம் ரூபா இனந் தெரியாதவர்களினால் கொள்ளையடித்து செல்லபபட்டதும் குறிப்பிடத்தக்கது.

## கொடிகாமம் தபாலகம் விரைவில் இயங்கும்?

(மிருசுவில்)

கொள்ளைச் சம்பவம் ஒன்றை அடுத்து மூடப்பட்ட கொடிகாமம் தபால் நிலையம் வழமையான அலுவல்களுக்காக விரைவில் மீண்டும் திறக்கப்படலாம் என சம்பந்தப்பட்ட வட்டாரங்களில் இருந்து அறியப்படுகின்றது.

தபால் திணைக்களத்தினால் இதுசம்பந்தமாக கோரப்பட்ட அறிக்கை ஒன்றுக்கு இங்கிருந்து சாதகமான பதில் அனுப்பப்பட்டதாகவும் இதனை அடுத்தே இந்நிலையத்தை விரைவில் மீண்டும் திறப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்படுவதாகவும் அறியபபடுகின்றது.

### பண்டாரியின் .

—1ம்- பக்கத் தொடர்

இன்று மாலை புதுடில்லி திரும்புவதற்கு முன்னர் இரண்டாவது தடவையாக ஜனாதிபதி ஜெயவர்த்தனாவை உதவியாளர்கள் எவருமின்றி திரு. பண்டாரி சந்தித்து உரையாடுவார்.

## பருத்தித்துறை பிரஜைகள் குழுக் கூட்டம்

ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக்கிழமை காலையில் நடாத்தப்பட்டு வந்த பருத்தித்துறை பிரஜைகள் குழுக் கூட்டம் இவ்வாரம் முதல் ஒவ்வொரு சனிக்கிழமையும் மாலை 4 மணிக்கு பருத்தித்துறை சிவன் கோவில் பார்வதபத்தினி கலா மண்டபத்தில் நடைபெறும் என குழு உறுப்பினர்கட்கும் பருத்தித்துறை புலோலி பநோகூ சங்க பொது முகாமையாளருக்கும் அழைப்புக்கள் அனுப்பப்பட்டுள்ளதென தலைவர் பேராசிரியர் வி கே கணேசலிங்கம் அறிவித்துள்ளார்.

## முதுகலைமாணி பட்டம் பெற்றார்

யாழ்ப்பாண நகரமும், அதன் விளிம்பு மாற்றங்களும் பற்றிய ஆய்வுக்கு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கிருஷ்ண பிள்ளை ஆறுமுகத்துக்கு முதுகலைமாணிப் பட்டம் வழங்கியுள்ளது. இவர் நகரப் புவியியல் அறிஞர்களான பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை, பேராசிரியர் ஜெயசிங்கம் ஆகியவர்களின் மேற்பார்வையில் இவ் ஆய்வை மேற்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது

## மீண்டும் பொலிஸ் நிலையம்

(ஊர்காவற்றுறை)

அண்மையில் குண்டு வைத்து சிறிது தகர்க்கப்பட்ட நிலையில் காணப்பட்ட ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையம் மீண்டும் திருத்தி அமைக்கப்படுகின்றது.

## வேலை வங்கிப் படிவங்கள்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் 18 – 40 வயதிற்குட்பட்டவர்களுக்கு வேலை வங்கிப்படிவங்கள் வழங்கப்படுகின்றன

"ஈழமுரசு" சாயிபாபா அட்வர்டைசிங் அசோசியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப்பகுதியில் 27-03-1985 புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது, தொலைபேசி: 23336.